**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure) .....

IN THE COURT OF IV ADDITIONAL SESSIONS JUDGE

S.C. No. 35/2022

Prosecution witness :LW-2 /PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | : Mrs. Bavani | Caste | : Not willing |
| Husband's Name | : Narendran | Calling | : House Wife |
| Village | : Perambur | Religion | : Not willing |
| Taluk | : Chennai | Age | : 22 |

(A1, A4 and A6 present. A3, A7 petition filed and allowed. A2 and A5 died.)

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 3rd day of August, 2024.

**முதல் விசாரணை:—**

நான் சென்னை பெரம்பூரில், ராஜீவ் காந்தி நகர் மெயின் தெருவில், புதிய கதவு எண். 10—ல் குடியிருந்து வருகிறேன். என் கணவர் பெயர் நரேந்திரன். என் தங்கச்சி பெயர் கலைவாணி என்பதாகும். ஆடலரசு என்பவரை எனக்கு தெரியும். அவருடைய முதல் மனைவி பெயர் மாலதி. மேற்படி ஆடலரசு என் அம்மாவுடன் சேர்ந்து வாழ்ந்தார். மேற்படி ஆடலரசுவின் மேல் வழக்குகள் இருக்கிறது. என் தாயார் விஜயா வீட்டு வேலை செய்து வந்தார். அலமேலு என்பவரை தெரியும். அவர் எங்கள் ஏரியாவை சேர்ந்தவர். அலமேலுவின் பிள்ளைகள் பெயர் தெரியாது. என் தாயாரிடம் மேற்படி அலமேலு கடன் பெற்றுள்ளாரா என்றால் தெரியாது. அலமேலுவின் கணவர் பெயர் மற்றும் பிள்ளைகள் பெயர் தெரியாது. அலமேலுவின் மருமகன் பெயரும் தெரியாது. மேற்படி அலமேலு குடும்பத்தினர் என் அம்மாவுடன் சேர்ந்து வாழ்ந்த ஆடலரசுவின் மீது கேஸ்

கொடுத்தார்களா என்றால் தெரியாது. சாந்தி என்பவர் என் தங்கச்சி கலைவாணியின் மாமியார். எதிரிகளை தெரியாது. என் அம்மாவுடன் சேர்ந்து வாழ்ந்த ஆடலரசு தற்போது உயிருடன் இல்லை. மேற்படி ஆடலரசு என்பவரை யாரோ வெட்டி சாகடித்துவிட்டதாக கேள்விப்பட்டேன். சம்பவம் என்னைக்கு நடந்தது என்று தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் கையெழுத்து எதற்காக போட்டேன் என்று ஞாபகம் இல்லை. அந்த கையெழுத்தை எந்த தேதியில், எங்கு வைத்து போட்டேன் என்று ஞாபகம் இல்லை. போலீஸ் விசாரணையில் என்ன சொன்னேன் என்றும் ஞாபகம் இல்லை.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரப்பட்டு, அது பரிசீலனைக்கு பின்னர் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)**

**குறுக்கு விசாரணை:-(அரசு தரப்பில்)**

போலீஸார் என்னை விசாரித்ததாகவும், போலீஸ் விசாரணையில் கடந்த 27.04.2014 ஆம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் நானும், என் அம்மாவும், என் தங்கச்சியின் மாமியாரும் ராஜீவ் காந்தி நகர் மெயின் தெருவில் வீட்டின் அருகில் பேசி கொண்டிருந்த போது, அலமேலு என்பவர் என் அம்மாவுக்கு கொடுக்க வேண்டிய சீட்டு பணத்தை பற்றி என் அம்மாவுடன் சேர்ந்து வாழ்ந்த ஆடலரசு என்பவர் கேட்டதால், மேற்படி

அலமேலுவின் துண்டுதலின்படி மேற்படி அலமேலுவின் மகன், மருமகன் ராஜ்குமார் மற்றும் அவரது வகையறாவை சேர்ந்தவர்கள் மேற்படி ஆடலரசுவை பலத்த ஆயுதங்களால் தாக்கியும், அறிவாளால் வெட்டியும் கொலை செய்துவிட்டதாகவும், இது குறித்து என் அம்மா புகார் கொடுத்ததாகவும், அதில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து போட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:—(எதிரிகள் தரப்பில்)**

இல்லை.

(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தேவையில்லை என்று எடுத்துரைக்கப்பட்டது.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

V PANDIARAJ

Digitally signed by V PANDIARAJ
Date: 2024.08.03 18:39:55 +0530

Dt. 03.08.2024 IV Addl. Sessions Judge